செய்தி வெளியீடு எண் :26 நாள் : 15.07.2021

**தேனி மாவட்டம்**

**உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள மனுக்களின் மனுதாரர்களை நேரில் சந்தித்தும் மற்றும் கொரோனா தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பாகவும், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளிதரன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.**

--------------

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள மனுக்கள் தொடர்பாக மனுதாரர்களை நேரில் சந்தித்தும், சின்னமனூர் நகராட்சி பகுதிகளில், கொரோனா தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பாகவும், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளிதரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (15.07.2021) ஆய்வு மேற்கொண்டு, கொரோனா தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகளை கடைப்பிடிக்காத கடைகளுக்கு அபராதம் விதித்தும் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் கையொப்பமிட்ட 5 கோப்புகளில் ஒன்றான உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்ற திட்டத்தை அறவித்து, அதற்கென தனித்துறையை உருவாக்கி, செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்கள் மீது ஆய்வு மேற்கொண்டு, உட்கட்டமைப்பு (புதிய சாலைகள், மேம்பாலங்கள் போன்றவை) சமூக சொத்துகள் (பள்ளிகள், மருத்துவமனைகள் போன்றவை) மற்றும் தனிப்பட்ட நபர்களின் கோரிக்கைகள் என மூன்றாகப்பிரித்து, பின்னர் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு, 100 நாட்களுக்குள் தீர்வு காண உத்தரவிட்டுள்ளர்கள்.

தனிநபர் கோரிக்கைகளைப் பொறுத்தவரை விரைந்து அவர்களது மனுக்கள் மீது உரிய நடவடிக்கைள் மேற்கொண்டு, சாத்தியமானவை அனைத்திற்கும் உடனடித் தீர்வும், முடியாதவற்றிற்கு என்ன காரணத்தினால் கோரிக்கை நிறைவேற்ற இயலவில்லை என்ற அதற்கான தெளிவான காரணம் அளித்திடவும், அவர்கள் தொடர்ந்து கோரிக்கைகள் குறித்து மனு செய்வதைத் தவிர்க்கும் வகையில், மாற்று வழியில் அவர்களின் தேவைகளை நிறைவு செய்து கொள்ள வழிகாட்டுதல்களை வழங்கிடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதன்படி, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் தேனி மாவட்டத்தில் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக, இதுவரை 10,320 மனுக்கள் பெறப்பட்டு, தகுதியான 2,742 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டும், 6,051 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டும், இதர மனுக்கள் பரிசீலனையிலும் உள்ளது. அதில், உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் மட்டும் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக, இதுவரை 3,879 மனுக்கள் பெறப்பட்டு, தகுதியான 481 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டும், 3,097 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டும், இதர மனுக்கள் பரிசீலனையிலும் உள்ளது.

இதில், தள்ளுபடி செய்யப்பட்டுள்ள மனுக்களின் மனுதாரர்களை இன்றைய தினம் நேரில் சந்தித்து, மனுதாரரின் கோரிக்கையின் உண்மை தன்மை தொடர்பாகவும், அம்மனுவின் மீது மறுபரிசீலனை செய்வதற்கான வாய்ப்புகள் குறித்தும் சம்பந்தப்பட்ட துறை அலுவலா்களுடன் நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், புதிதாக வரப்பெறும் மனுக்கள் மீதும் தனிக் கவனம் செலுத்தியும், தகுதி வாய்ந்த மனுக்களுக்கு உரிய அரசின் பயன்கள் கிடைத்திட உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, உத்தமபாளையம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகள் மற்றும் சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கடைகள் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்கள் மட்டுமின்றி அப்பகுதியில் வந்த அரசுப்பேருந்தில் பயணம் செய்த பயணிகளிடம் கொரோனா விழிப்புணர்வு குறித்து எடுத்துரைத்து, அரசின் கொரோனா தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகளை முறையாக பின்பற்றுவது குறித்தும், முககவசங்கள் அணிந்திடவும், சமூக இடைவெளியினை முறையாக பின்பற்றிடவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. இதில் முறையாக அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றிடாத கடைகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி அபராதம் விதிக்கப்பட்டது. அரசால் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளை சரிவர கடைபிடித்து, கொரோனா தொற்று நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அப்பகுதி பொதுமக்களிடம் அறிவுறுத்தினார்.

மேலும், சின்னமனூர் நகராட்சி பகுதியில் உள்ள கடை எண் 3 மற்றும் 4 ஆகிய நியாய விலைக்கடைகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, அந்நியாயவிலைக் கடைகளில் குடிமைப் பொருட்களை வாங்க வருகை புரிந்திருந்த பொதுமக்களிடம், கொரோனா பாதிப்பு நிவாரண உதவித்தொகை ரூ.4,000 மற்றும் 14 வகையான மளிகைப்பொருட்களை முறையாக பெற்றது குறித்தும், அந்நியாய விலைக்கடையில் பயன்படுத்தப்படும் விற்பனை முனைய இயந்திரத்தின் மூலம் மின்னணு பதிவு செய்யப்பட்ட குடும்ப அட்டைதாரர்களின் எண்ணிக்கை, இதுதவிர இம்மாதத்திற்கென குடிமைப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டைதாரர்களின் எண்ணிக்கை, தரம் மற்றும் இருப்பு நிலை, பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள், பொருட்களை அளவீடு செய்யும் கருவிகள் (தராசு) ஆகியன குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, ஓடைப்பட்டி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவு, மருந்து கொடுக்கும் இடம், மருந்துகளின் இருப்பு, கழிப்பறை வசதிகள், விபத்து மற்றும் சிகிச்சை பிரிவு, சித்தா பிரிவு உள்ளிட்டவைகளில் ஆய்வு மேற்கொண்டு, பின்னர் மாவட்டத்தின் எல்லை பகுதியான, குமுளி சோதனைச்சாவடியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, அண்டை மாநிலங்களிலிருந்து வருகை புரிபவர்களின் எண்ணிக்கை மற்றும் கொரோனா தடுப்பு பணிகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுகளின்போது, உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி பி.கௌசல்யா, வட்டாட்சியர் உதயராணி, சின்னமனூர் நகராட்சி ஆணையாளர் சியாமளா உள்ளிட்ட துறை சார்ந்த் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**